20-2-2019

மக்கள் குரல்

# ஆபரேஷன் செய்த நோயாளிகளுக்கு மீண்டும் இருதய பாதிப்பு ஏற்பட்டால் நர்ஸ், மருத்துவருக்கு அவசர சிகிச்சை பயிற்சி

## ராமச்சந்திரா மருத்துவமனை ஏற்பாடு



சென்னை, பிப். 20–

இருதய அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு அவசர சிகிச்சைக்கான சிறப்பு ஒரு நாள் பயிற்சி படிப்பு ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் பிரிட்டனின் CALS என்ற அமைப்பும் இணைந்து நடத்துகின்றன. இதற்காக இந்த இரு அமைப்புகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

இந்த உயிர் காக்கும் சிகிச்சை மருத்துவமனைகளில் மட்டுமே அளிக்கப்படும். இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் நாட்டில் பரவலாக உள்ள நிலையில் அருகில் உள்ள சிறப்பு மருத்துவமனைகளில் உள்ள இருதய, நெஞ்சக அறுவை சிகிச்சை மருத்துவர்கள், மயக்கவியல், தீவிர சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், இருதய நோய் சிகிச்சை செவிலியர்களுக்கு இந்த ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படும். 3 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இப்பயிற்சியில் முதலில் ராமச்சந்திரா மருத்துவ மைய மருத்துவர்கள், செவிலியர்களுக்கும் 3வது நாள் பிற மருத்துவமனை சார்ந்தவர்களும் பயன்பெறுவர். ராமச்சந்திரா மருத்துவ மையத்தில், மிகவும் அனுபவம் வாய்ந்த சிலர் இப்பயிற்சியை அளிக்கும் பயிற்சியாளர்களாக முதலில் உருவாக்கப்படுவார்கள்.

உலகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வின்படி பல்வேறு இருதய அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளவர்களில் 8% பேருக்கு மீண்டும் மாரடைப்பு, பிற தீவிர பிரச்சனைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதனால் உயிருக்கு ஆபத்தும், உடல்நிலையில் பெரிய பாதிப்பும் ஏற்பட வாய்ப்புள்ளன. இது மாதிரியான நோயாளிகளுக்கு CALS செயல் முறையால் மிகுந்த பலன் கிடைக்கிறது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இம்முறையை ஐரோப்பா மற்றும் மேற்கத்திய நாடுகள் பின்பற்றி வருகின்றன.

இந்த ஒரு நாள் பயிற்சியில் நிகர் நிஜ நிலைகளில் தீவிர பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ராமச்சந்திரா மருத்துவ மையத்தில் அதிநவீன சிமுலேட்டர் உள்ளது.

இப்பயிற்சியை பிரிட்டனின் பிரபல இருதய அறுவை சிகிச்சை மருத்துவர் எடின்பராவை சேர்ந்த டாக்டர் வின்சன் ஜியோடார்னோ, கேம்பிரிட்ஜை சேர்ந்த இருதய தீவிர சிகிச்சை மருத்துவர் டாக்டர் கிரண் சலோங்கி, பர்மிங்ஹாமை சேர்ந்த இருதய சிகிச்சை செவிலியர் தாரா பாட்லி ஆகியோர் செய்து விளக்குவர்.

இந்தியாவில் இப்பயிற்சி முதன்முறையாக ராமச்சந்திரா மருத்துவ மையத்தில் நடைபெறுகிறது.